செ.வெ.எண்:23 நாள்: 14.09.2020

# அரியலூர் மாவட்டம்
# இணையதளம் வாயிலாக பொதுமக்களின் குறைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் கேட்டறிந்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், இணையதளம் வாயிலாக **“மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்”** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று **(14.09.2020)** நடைபெற்றது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில், பொது போக்குவரத்து, இ-பாஸ் ரத்து உள்ளிட்ட பல்வேறு தளர்வுகளை அறிவித்துள்ளதன் அடிப்படையில் பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, அரியலூர் மாவட்டத்தில் இன்று (14.09.2020) (https://ariyalur.nic.in)-ல் என்ற இணையதளத்தில் கூகுள் மீட் (Google Meet) என்ற இணைப்பு மூலம் (Online) காணொளி காட்சி வாயிலாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரை நேரடியாக தொடர்பு கொண்டு தங்கள் கோரிக்கை மனுக்களை அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது. மேலும் இணையவழி வசதி இல்லாத பொதுமக்கள் தங்கள் கிராமத்திற்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் செயல்பட்டுவரும் பொது சேவை மையங்களின் மூலம் தங்களது கோரிக்கைகள் மனுக்கள் அளிக்க வசதி செய்யப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் இன்று (14.09.2020) இணையவழி மூலம் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை மற்றும் இதர உதவித்தொகைகள் பட்டா மாற்றம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் இணையதளம் வழியாக பெறப்பட்டுள்ளது. பொதுமக்கள் தெரிவித்த கோரிக்கைகள் தொடர்பாக கனிவுடன் கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நேரம் ஒதுக்கப்பட்டு, அவர்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. தொடர்ந்து, வாட்ஸ்சப் மூலமும் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.

மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) ஏழுமலை உள்ளிட்டவர்களுடன், தொடர்புடைய பிறத்துறை அலுவலர்கள் இணையவழி வாயிலாக கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**